**செ.வெ.எண்: 423** **நாள்: 27.07.2026**

**புதுக்கோட்டை மாவட்டம்**

**மீன்குஞ்சுகள் கொள்முதல் செய்து மீன்வளர்த்திட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

மீனவளம் மற்றும் மீனவர் நலத்துறை புதுக்கோட்டை மாவட்டத்தில் கறம்பக்குடி தாலுகா தட்டாமனைப்பட்டி அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை மற்றும், அறந்தாங்கி தாலுகா கருவிடைச்சேரி, குருங்களூர் ஆகிய அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. மேலும் இங்கு மீன்குஞ்சுகள் வளர்ப்பு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மீன்பண்ணைகளில் அரசு நிர்ணயித்த விலையில் மீன் குஞ்சுகள் (விரலிகள்) விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போது, இந்திய பெருங்கெண்டை மீன்குஞ்சுகள் கட்லா, ரோகு மற்றும் மிர்கால் மீன்குஞ்சுள் விற்பணைக்கு தயார் நிலையில் உள்ளது. எனவே மீன்வளர்ப்பு கண்மாய், குளங்கள் மற்றும் நீர்தேக்கங்களுக்கு மீன்குஞ்சுள் தேவைப்படும் விவசாயிகள், குத்தகைதாரர்கள் அரசு நிர்ணயித்த விலையில் மீன்குஞ்சுகள் கொள்முதல் செய்து மீன்வளர்த்து பயன் பெறலாம். மேலும் விவரங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் ,நிஜாம் காலனி புதுக்கோட்டை முகவரியிலோ அல்லது த தட்டாமனைப்பட்டி மீன்வள சார் ஆய்வாளர் கைபேசி எண்.8248970355, அறந்தாங்கி மீன்வள சார் ஆய்வாளர் கைபேசி எண்.9751616866 தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai    PRO PDKT    @PRO_Pudukkottai    Pro.Pudukkottai